★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

EELA NADU

கலர் 21 கார்த்திகை 8 முஹறம் 3 இதழ் 285
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-11-79

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

ரிக்கோவுக்கு வேறு கிளைகள் கிடையாது

"பாராளுமன்ற உரைகள் கூட யாழ் பத்திரிகைகளில் தணிக்கை

சபையின் உரிமைகளை இந்நடவடிக்கை மீறுகிறது"

சபாநாயகரிடம் 'அமிர்' புகார்

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரைகளைக்கூட யாழ். மாவட்டத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி தணிக்கைசெய்துவிடுகிறார் அவரின் இச்செயல் சபையின் விசேட உரிமைகளை மீறுவதாக உள்ளது".

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் புகார் செய்தார்.

யாழ். மாவட்ட தகுதி வாய்ந்த அதிகாரி திரு. யோசேந்திரா துரைசுவாமியின் இந்த நடவடிக்கையைத் தடுக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டார்.

சபாநாயகர் பதில்

இவ்விவகாரத்தில் தாம் நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் உறுதி அளித்தார்.

நிதி அமைச்சர் திரு ரொனி டி மெல்லும் பத்திரிகைச்செய்தி குறித்து புகார் ஒன்றைத் தெரிவித்தார்.

ஆங்கிலப் பத்திரிகையான "டெய்லிமிரர்" தனது வரவு செலவுத்திட்ட உரையில் ஒரு அம்சத்தைத் தவறாகப் பிரசுரித்தது என்றும் அதனை திருத்திக் கொள்ளும் என்று நம்புவதாகவும் திரு தெரிவித்தார். (இ)

மக்கா பள்ளிவாசலை சவூதி படைகள் மீட்டன

முற்றுகையாளர் கைது!

மக்கா, நவ 23

முன்றுநாள்களுக்கு முன்னர் ஆயுதந்தாங்கிய தீவிர வாதிகளால் கைப்பற்றப்பட்ட மக்கா நகரின் பெரிய பள்ளிவாசலை சவூதி அரேபியப் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளதுடன் ஆயுதந் தாங்கியவர்களையும் கைது செய்துள்ளன.

இச்செய்தியை சவூதி அரேபிய வானொலி அறிவித்தது.

பெரிய பள்ளிவாசல் முழுவதும் சவூதி படைகளின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள அதேவேளையில் சில ஆயுதந் தாங்கிய தீவிரவாதிகளுக்குப் படை வீரர்களுக்குமிடையில் துப்பாக்கிச்சண்டைநடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கடையோரக் கிடைத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஆ)

இந்திரா தமிழகம் வருகிறார்

சென்னை, நவ 23

இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான திருமதி இந்திரா காந்தி அடுத்தவாரம் நடுப் பகுதியில் தேர்தல் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு தமிழகம் வருகிறார். (இ)

யாழ். மாநகரசபை ஊழியர்

7 பேர் தற்காலிக வேலைநீக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் ஏழுபேர் நேற்று தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அலுவலக தொழிலாளர் 30 பேர் நேற்றுக்காலை யாழ் மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதனிடம் நேரில்சென்று ஆட்சேபம் தெரிவித்தனர்.

யாழ் மாநகர சபைச்செயலாளர் உதிரிப்பாகங்கள் காணாமற்போனது சம்பந்தமான விசாரணையைத் தொடர்ந்து நகரமண்டப பாதுகாவலர், 3 காவலாளிகள், ஒரு தொழிலாளி ஆகியோருக்கு, வேலைநேரத்தில் விதானத்தில் இருக்கவில்லை என்ற புகாரின் பேரில் 2 ஓவியர்களும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்தே 30 அலுவலக ஊழியர்கள் நேற்றுக்காலை ஆட்சேபம் தெரிவித்தனர்.

காலை நேரத்தில் ஆட்சேபம் தெரிவிக்க வந்ததற்கு விளக்கம் தருமாறு அந்த 30 ஊழியர்களிடமும் கோரப்பட்டதாகவும் அவர்கள் நேற்று பிற்பகல் விளக்கம் கொடுத்தனர்.

யாழ் மாநகரசபை இரவாய பிரதம லிபிதர்களும், கிரியாவை நேரத்தில் அலுவலகத் தொழிலாளரை வெளியில் செல்ல அனுமதித்ததற்கு எச்சரிக்கைசெய்யப்பட்டனர். (எ)

மாஜிஸ்ரேட் நீதிமன்றங்கள் லஞ்சவழக்குகளைவிசாரிக்குமா

(கொழும்பு)

லஞ்ச வழக்குகளை இனிமேல் மாஜிஸ்ரேட் நீதிமன்றங்களே விசாரணை செய்யும்.

அதிகரித்துவரும் லஞ்சவழக்குகள் உடனுக்குடன் விசாரணைசெய்யும்பொருட்டே 200 ரூபாவுக்குக் குறைந்த லஞ்ச வழக்குகளை விசாரணை செய்ய மாஜிஸ்ரேட் நீதிமன்றங்களை அனுமதிப்பது என்று நீதி

(6-ம் பக்கம் பார்க்க)

சரண்சிங் இன்று தமிழகம் வருகிறார்

(சென்னை)

இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் இன்று தமிழகம் வருகிறார்.

பிற்பகல் சேலத்தில் நடைபெறும் விவசாயிகள் பேரணி ஒன்றில் கலந்துகொள்ளும் திரு சரண்சிங் மாலைசென்னை மரீனா கடற்கரையில் பொதுக் கூட்டத்திலுங்கலந்துகொண்டு உரையாற்றுவார். (இ)

யாழ். நகரில் கடற்றொழில் அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

கடற்றொழில் அமைச்சர் திரு. பெத்தகமே பெரேரா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

காலைநேரம் மு-நேரம் அபிவிருத்திச் சபையில் நடந்த கூட்டமொன்றில் பங்கு பற்றியபின் கொழும்பு திரும்பினார். (கோ)

பலத்த காற்று எச்சரிக்கை!

(கொழும்பு)

நாட்டின் வடக்கு, வடகிழக்கு கரையோரங்களில் இன்றுகாலை 6 மணிவரை கடல் கொந்தளிப்புடன் பலத்த காற்றும் வீசுமாதலால் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

வங்காளவிரிகுடாவில் இலங்கைக்கு கிழக்கேயுள்ள தொடர்புள்ள காற்று அமுக்கம் மேற்கு வடமேற்கு திசையாக நகருவதால் அந்த இலங்கை வடக்கு வடகிழக்கு பகுதிகளில் பலத்த மழைபெய்யும் என்றும் அறிக்கைவிடப்பட்டது. (இ)

உரம் கொண்டுசெல்ல லொறிகள் தேவை

காங்கேசன்துறையில் உள்ள உரக்கூட்டுத் தாபன களஞ்சியங்களிலிருந்து 6500 டன் உரம் கொழும்பிற்கு கொண்டுசெல்ல லொறிகள் தேவை. 25-11-79 ஞாயிறு காலை 6-00 மணிமுதல் தினமும் குறைந்தது 40 லொறிகள் ஏற்றப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

க. ஜெயபாலசிங்கம் அன்ட் கம்பனி
காங்கேசன்துறை தொலைபேசி 34 அல்லது 800

யோகி இராமையா ஈழம் வருகிறார்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சிரியா பாபாஜி யோக சங்கத்தின் தலைவரும் ஸ்தாபகருமான குருமேதி எஸ் எல் ஏ இராமையா, உலகநாடுகளுக்கும் சுற்றுவிஜயம் செய்துவிட்டு அடுத்தமாதம் ஆறாந்திகதி இலங்கை வருகின்றார்.

இரண்டுவாரங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் யோகி இராமையா கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் யோக சன வகுப்புகள், தியான வகுப்புகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யோகி இராமையா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

யாழ். நகரில் பலாலிவீதி-பருத்தித்துறைவீதி சந்திக்கு மிடத்தில் பருத்தித்துறைவீதி முகப்பில் இரண்டரைப் பரப் புக்கொண்ட விற்பனைக்குண்டு வியாரங்களுக்கு பொருத்தமான சீவன் ஜவுளி நாளிகை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7423. 4188

மரக்கறிகள் விற்பனைக்குண்டு. தோட்டத்தில் சுமார் 300 மரங்கள் வரை உண்டு. விலை விபரங்களுக்கு மனேஜர் ஏ பவர் அன் கம்பனி லிமிடெட், 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4186

மருதங்கேணி- பளைரோட்டுக் கரையில் மாசாரில் 10 ஏக்கர் திருத்தப்படாத காணி புலோலி தெற்கில் ரோட்டோரத்தில் சுமார் 2 பரப்பு குடிநிலமும், இந்தியன் விக்கியஸ் மிகுதியும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சு. சந்திரசேகரம், புற்றளை, புலோலி தெற்கு, புலோலி. 4169

சித்தங்கேணி சந்திக்கு கரையில் 3½ பரப்புக்காணி கல்வீடு 2 அறை, விறாந்தை, சுகினி, கக்கூசு, நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் (கிணறு சுழல் 6 முழம்) ரூபாய் 60,000/-க்கு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விருப்புவோர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 4170, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4170

யாழ்ப்பாணம் பூநகரி வரும் வழி வடக்கு தெற்கு அடக்கிய தும் பிரதான வீதிக்கு பக்கத்திலும் நல்ல தண்ணீர் கொண்டதுமான 24 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4164, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4164

லிஸ்ரர் மறீன்கியர் பொக்ஸ் 32 அடி வள்ளத்துக்குரிய ஸ்ரேன்ரியூ, புறப்பெல்லர் சாப்ற் ஆகியவை பாவிக்கும் நிலையில் கீழ்வரணுக்கு விலை சந்தில் விற்பனைக்குண்டு தர்மராஜா, ஆதுகால் வீதி துக்கிருமையில், 39, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். 4172

வாடகைக்கு

உடுவில் பெண் பாடசாலை முப்பில் இரண்டு அறைகளும் வரவேற்பு அறையும் (Store) வாடகைக்குண்டு விருப்புவோர், மணிக்கூட்டுக் கூட, கோண்றி மேல் செய்வதற்கு கூப்பிடவும். தொடர்பு கொள்க. P C சுவிப்ரமணியம், உடுவில். 4148

விற்பனைக்கு

Ford டீசல் வான் இலங்கையிலிருந்து புதுப்பித்த நல்ல நிலைமையில் வரவழைத்த விற்பனைக்கு உண்டு B M C லாறி, கார் மோர் பொக்ஸ் ஆகியவையும் விற்பனைக்கு உண்டு கம்பிறிக்கோல் எண்டப்பிறைஸ், பொற்பதி வீதி, கொக்குவில். 4187

தங்கரத ஒக்கிமரமரக்கறிகள், உறைகளில் மரக்கறி, மிளகாய் மற்றும் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு சான்சேவுகளும் கமத்தொழில் விரிவாக்க உத்தியோகஸ்தரின் ஆலோசனையுடன் வளர்க்கப்பட்டவை கிடைக்குமிடம்: விக்டோரியா மேதர் மெமோறியல் நகரிர் நிலையம். (மருதனாமடம் சந்திக்கும் இணுவில் புகையிரத நிலையத்திற்கும் இடையில்) மருதனாமடம். 4179

தேவை

கோப்பாய் தெற்கு பழைய வீதியிலிருக்கும் வீரபத்திர சுவாமி கோவிலுக்கு தகுதி வாய்ந்த குருக்கள் தேவை. 15-12-79 வரையும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும். வாழ்க்கைச் செலவு பற்றிய விபரம் நேரில் பேசிக்கொள்ளலாம். செயலாளர், பரிபாலன சபை, வீரபத்திரர் கோவில், பழைய வீதி, கோப்பாய். 4162

சில நவீன வசதிகளுடன் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும் மனேஜர், A. பவர் அன் கம்பனி லிமிடெட், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4180

FOR SALE

ATLAS Made in Denmark, Crystal Freezer 210 De Luxe Type FB 512 V 210 — 56 c/s W 120 Somasundram, Sub - Post Office, Sithankerny. 4166

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

கேள்விப்பத்திரம்

இசுசு லொறி-- என்சின் வேலை

இசுசு லொறி என்சின் வேலை செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட லாரிச் உரிமையாளர்களிடம் இருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. வைப்புப் பணமாக ரூபா 500/- விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 2/-க் தங்கமைக் காரியாலயத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பங்கள் பரவுக் 30-11-79 க்கு முன் தங்கமைக் காரியாலயத்தில் கையளிக்கப்படவேண்டும்.

பொ. சோமாஸ்கந்தர்

பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம் 4177

Immediate Vacancies in Passenger/Cargo Vessels

Chief Engineers	Chief Officers
2nd/3rd Engineers	2nd/3rd Officers
Apprentice Engineers	Radio Officers
Electricians	Pump Men
Firemen/Oiler	Chief Cooks
Cooks	Assistant Cooks

Salaries according to Greek Collective Aggreement
Call personally with original passport & CDC and their photostat copies

at 111, Kasthuriar Road, Jaffna.

between 2 and 5 p m. TODAY, 24-11-79
or between 9 a.m and 4 p m. TOMORROW, 25-11-79 (4176)

மணமகள் தேவை

ஓமான் அரசாங்கத்தில் மின்சாரப் பொறுப்பாளராகப் பணியாற்றும் City & Gnitds பூரண தொழில் நுட்பச் சான்றிதழ் பெற்றவரும் யாழ்ப்பாண சைவ வேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவருமான 29 வயது இளைஞருக்கு அழகுள்ள பெண் நியாயமான சீதனத்துடன் தேவை. உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.

விளம்பர இல: 4167, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(4167)

வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

சுமார் 3500 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன முடிவுத் திகதி 05 - 12 - 1979 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பணம் ரூபா 2/- செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் 30 - 11 - 79 இதாடக்கம் 04 - 12 - 79 நண்பகல் 12-00 மணிவரை இச்சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கட்டுப்பணம் ரூபா 250/- கேள்விப்பத்திரத்துடன் முடிவுத்திகதி முன்னதாக "பொதுமுகாமையாளர், தென்மராட்சி கூற்று ப - நோ - கூ - சங்கம் வரதடி" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்; தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும்; காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பொது முகாமையாளர் தென்மராட்சி கூற்று ப - நோ - கூ - சங்கம், வரதடி.

1979 - 11 - 22. 4178

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), பருத்தித்துறை.

பகிரங்க ஏல விற்பனை (வெற்றுச் சாக்கு)

பருத்தித்துறை பல. நோ. கூ. சங்கத்தின் கொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 1,000 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 08-12-79 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்

ஏலக் கூற்றில் வெற்றி பெறவோர், ஏலக் கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று அப்பொருட்களை உடன் ஏற்றிச் செல்லவேண்டும்

பொது முகாமையாளர், பரு. ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை

1979-11-16 4165

சேர் பொன்னம்பலம் இராமநாதன்

குருபூசை விழா

25-11-79 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் கொண்டாடப்படும்.

கல்லூரியில் அமைந்துள்ள சமாதி ஆலயத்தில் அபிஷேகமும் திருவிழாவும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், இராமநாதன் கல்லூரி.

(4173)

விற்பனையாகிறது

1980-ம் ஆண்டுக்கான
கலண்டர்கள், டயறிகள், நத்தார், புதுவருட, பிறந்ததின வாழ்த்து மடல்கள், பாடப்புத்தகங்கள், கணித உபகரணங்கள் தினசரி, வார மாத சஞ்சிகைகள் வானொலி மஞ்சரி, பொருளியல் நோக்கு மற்றும் இலங்கை - இந்திய புத்தகங்கள்

சாரதா ஸ்ரோர்ஸ் அன்ட் புத்தகசாலை,

2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

குறைந்த காலத்தில் நிறைந்த வாடிக்கையாளர்களைக் கொண்டது,
நூல் நிலையங்கட்கும் வியாபாரிகட்கும் பாடசாலைகட்கும் விசேட கழிவு.
1980 ம் ஆண்டுக்கான சஞ்சிகைகளுக்கு சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

(4185)

இன்று திறப்பு விழா

மாக்மிலன் புத்தகசாலை

இன்று 24-11-79 சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 1-15 வரையுமுள்ள சுபவேளையில் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கப்படும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்களிடம் பாலர் வகுப்பு முதல் உயர்கல்விக்கான வகுப்புவரையிலும் தேவையான புத்தகங்கள், கணித உபகரணங்கள் Medical Law, Accountancy Engineering, சோதிடம், விஞ்ஞானம், சமய நூல்களையும் தமிழ் ஆங்கிலநாவல்களையும்,

தினசரி வார மாத சஞ்சிகைகளையும் வானொலி மஞ்சரி, பொருளியல் நோக்கு மற்றும் வீரகேசரி மித்திரன் பிரசுரங்களையும்,

நத்தார் புதுவருட பிறந்ததின வாழ்த்து மடல்களையும், 1980ம் ஆண்டுக்குரிய கலண்டர்கள் டயறிகளையும் ஒரே இடத்தில் தெரிவு செய்வதற்கு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

1980ம் ஆண்டுக்கான சஞ்சிகைகளுக்கு சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

நூல்நிலையங்களுக்கும் வியாபாரிகளுக்கும் பாடசாலைகளுக்கும் விசேடகழிவு.

Makkmilan Book Depot
(STATION JUNCTION)
4184 673, Hospital Road Jaffna

உ
சிவமயம்

ஈழத்துச் சிதம்பர புராணம் பாடிய நவாலியூர் புலவர்மணி சோ. இளமுருகனாரின் நினைவு தினத்தை ஒட்டி காரைநகர் மணிவாசகர்சபை நடாத்தும்

கவிதைப்போட்டி

போட்டிக்குரிய தலைப்பு:
"இன்தமிழ் காத்த இளமுருகன்"

பரிசில்கள்

முதலாம் பரிசு	-- தங்கப்பதக்கம்
இரண்டாம் பரிசு	-- வெள்ளிப்பதக்கம்
மூன்றும் பரிசு	-- வெள்ளிக்கிண்ணம்

இப்பரிசில்கள் 1-1-80ல் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில்நடைபெறவிருக்கும் மணிவாசகர் விழாவின்போது வழங்கப்படும்.

போட்டி நிபந்தனைகள்:

1. இப்போட்டியில் வயதுக் கட்டுப்பாடின்றி யாவரும் பங்குபற்றலாம்.
2. கவிதைகள் இருபதிற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
3. கவிதைகளை மூன்று பிரதிகளில் 22-12-79 சனிக்கிழமைக்கு முன்பாக செயலாளர், மணிவாசகர் சபை, காரைநகர். என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(4171)

மக்கள் கருத்து

எமக்கு விமோசனம் கிடைக்குமா?

"பால் ஆசிரியர்களாகிய எமக்கு தற்போதைய அரசின் மூன்றாவது வரவு-செலவுத்திட்டத்திலாவது விமோசனம் கிடைக்குமா என்று ஏக்கித் தொண்டிருக்கிறோம்.

தற்போதைய அரசு ஆட்சி பீடம் ஏறியேற்றதும் பால் ஆசிரியர்களை அரசாங்க பாடசாலைகளிற் சேர்க்கும் வயதை ஐந்தாகக் குறைத்தது. இது நல்லதாக இருக்கலாம். ஒவ்வொருவராலும் பாராட்டவேண்டிய நடவடிக்கையாகும். ஏழை மக்களின் ஒரு வரப்பிரசாதமாகவும் இது அமைகிறது. இதனை நாமும் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனால் இத்திட்டத்தோடு முன்னைய அரசின் தொண்டையர் பால் பாடசாலைகளை ஏற்படுத்தித் திறம்பட நடாத்தி ஏழு வயதில் உள்ள மாணவர்களைப் அரசாங்க பாடசாலைகளில் சேர உதவியளித்த எமக்கு நிலையையும் உணர்ந்து உடனடியாக எமக்கும் அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பாசிரியைகளாக நியமனம் தந்திருக்க வேண்டியது அரசின் முதற் கடமையாகும்.

இதனை முதலாவது வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். நாமுமும் எமக்கு சம்பந்தமான மூலம், கல்வி அமைச்சுகளுக்கும், பிரதமருக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிலருக்கும் மகஜர் மூலம் கேட்டிருந்தோம். பல மகஜர்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பியும் எவ்வித பதிலுமில்லை; நடவடிக்கையுமில்லை.

கல்வி அமைச்சு ஆசிரிய பதவிக்கு வர்த்தமானிமூலம் கேட்டிருந்த தகைமைகளோடும் அதற்கு மேலாகவும் தகைமை பெற்று 'பால் கல்வி முறைப் பயிற்சி' கேலதிகமாகப் பெற்றிருப்போரோடு நாம் பால்களைக் கற்பித்து நற்பேறு கண்ட அனுபவம் உடைய ஆசிரியைகளாக இருக்கிறோம்.

ஆகவே இம்முறையாவது மேன்மைதங்கிய ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் எமக்கு நியமனம் கல்வி அமைச்சுக்கு உணர்த்தி எமக்கு மீது கருணைகூர்ந்து எமக்கு விமோசனமளிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

லலிதா நாகேந்திரஐயர்
(பால் ஆசிரியை)
வட்டுக்கோட்டை.

ஃ ஃ ஃ

நாவலர் பட்டம் எங்கு கிடைத்தது?

20-11-79 'ஈழநாடு' இதழ் 3-ம் பக்கத்தில் வெளிவந்த திருநெல்வேலி நாவலர் விழாச் செய்தியில், நாவலருக்கு நாவலர் பட்டம் சிதம்பரத்தில் கிடைத்ததாகப் பண்டிதமணி ஐயர் பேசியதாக உள்ளது. பண்டிதமணி ஐயர் அப்படிப் பேசவில்லை. நாவலருக்கு நாவலர் பட்டம் திருவாவடுதுறையிற் கிடைத்தது என்பது சிறு குழந்தைக்கும் தெரியும்.

அ. பஞ்சாட்சரம்
உருப்பராய

விடுமுறை-காலவிடுதிகள்

[உடுப்பிட்டி]

கதிர்காமம், சேருவில் ஆகிய இடங்களில் இரு விடுமுறை கால விடுதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி ஊழியரின் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கு சபை

வடபிரதேச மக்களின் குடிநீர்ப்பிரச்னை

வடிகாலமைப்புச் சபையின் வடபிரதேச முகாமையாளர் தரும் விளக்கம்

"மன்னார், தீவுப்பகுதிகளில் வாழும் மக்கள் குடிநீர்ப் பிரச்னையை எதிர்நோக்கி வருகிறார்கள். தரைக்குக்கீழ் நில நீரிலிருந்தே (Under Ground Water) குடிதண்ணீரைப் பெறுகிறார்கள். அதே நேரத்தில் விவசாயமும் நில நீரின் மூலம் இங்கு செய்யப்படுகின்றது. இந்நில நீர் மழை விழுச்சியின் மூலமே பெறப்படுகின்றது. ஆனால் மழை வீழ்ச்சி குறைவான பிரதேசங்களில் மன்னார், தீவுப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் பெரும் வரட்சியை எதிர்நோக்கவேண்டி நேரிடும். ஆகையால் வடபிரதேசத்தில் வாழும் மக்கள் நீரைச்சிக்கனமாகப் பாவிக்கவேண்டியநிலையில் உள்ளனர். குடிநீரிலுள்ள இப்பிரதேச மக்கள் வருங்காலத்தில் பல பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும்."

இவ்வாறு தேங்கிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் வடபிரதேச முகாமையாளர் திரு எஸ் பாலமுத்து இங்கு வடபிரதேசங்களில் குடிநீர்ப்பிரச்னை சம்பந்தமாக கருத்து வெளியிடுகையில் கூறினார்.

குடிநீர்ப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு வடபிரதேசத்தில் தேங்கிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் இதுவரை கொள்ளப்படுகிறது.

(3) அவ்வலயப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட ஆண்டுதோறான பங்குமூலப்பணம் வரவுசெலவுத்திட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இத்திட்டங்கள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் மேற்கொள்ளப்படும்.

தற்போது இச்சபை கிளிநொச்சியில் ஒரு பாரிய குடிநீர் வழங்கல் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சிப் பட்டினசபைஎல்லைக்குள் வசிக்கும் மக்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்தின் நிர்மாண வேலைகளைத் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் குறிக்கப்பட்ட காலத்தில் பூர்த்திசெய்யமுடியாதிருக்கின்றது. எனினும் இத்திட்டத்தை விரைவில் பூர்த்திசெய்ய ஏற்றநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகரசபை மக்களின் குடிநீர்ப்பிரச்னையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தற்போது தேங்கிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இச்சபையினால் தற்போது

சிறிய குடிநீர் விநியோகத்திட்டம்

யுனிசெப் விநியோகத்தின் உதவியுடன் சர்வதேச சிறுவர் நிதியான இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு திட்டங்களில் ஒன்று வட்டுக்கோட்டை கிராமாட்சி எல்லைக்குட்பட்ட ஒரு பகுதிக்கும், மானிப்பாய் வேலணை கிராமாட்சி என்றப்பகுதியிலும் செயல்படுத்தப்பட்டு முடிவடைந்து இப்பொழுது இப்பகுதி மக்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

புங்குடுதீவினதும் ஊர்காவற்றுறை பட்டினசபை எல்லையிலுள்ள மக்களினதும் வரட்சிக் காலக் குடிநீர்ப் பிரச்னையைத்தீர்ப்பதற்கு "யுனிசெப்" ஸ்தாபனம் இரண்டு 'பவுசர்' களைத்தந்துதவியுள்ளது. இதில் புங்குடுதீவு மக்களுக்காக ஒரு 'பவுசர்' அதன் கிராமாட்சி மன்றத்திடம் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனத்தினால் நெடுந்தீவு மக்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தைப் பூர்த்தி செய்யவும் உதவியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் தற்பொழுது இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

"யுனிசெப்" ஸ்தாபனத்தின் உதவியுடன் அராலி தெற்கிலும், புத்தூர் கிராமாட்சி மன்றத்திலுள்ள பகுதியான வாதரவத்தையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளது. விசேஷமாக வாதரவத்தைப் மக்கள் நெடுங் காலமாக எதிர்நோக்கிய குடிநீர்ப் பிரச்னையை இத்திட்டம் தீர்த்தவைக்கும்.

இந்த ஸ்தாபனத்தினால் உதவி செய்யப்பட்டுள்ள ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, காரைநகர், மன்னாரிலுள்ள மாந்தைக்குமான நடைமுறைத் திட்டங்களுக்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பங்குமூலப்பணத்திட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து காரைநகர் வடக்குக்கான குடிநீர் விநியோகத் திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு அதன் கிராமாட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அராலி வடக்கு குடிநீர் விநியோகத்திட்ட விஸ்தரிப்பு வேலைகளும் பங்குமூலப்பணத்திட்ட வரவு திட்ட பணத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலாளர் வசிக்கும் தேவன்பிட்டி கிராமத்திற்கான குடிநீர் விநியோகத் திட்ட நிர்மாணவேலைகள் பங்குமூலப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் கீழ்வரும் குடிநீர் விநியோகத்திட்டங்களுக்கு இவ்வருட பங்குமூலப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

1 தெல்லிப்பளையிலுள்ள கல்லடி என்ற பகுதிக்கான குடிநீர்வழங்கும் திட்டம் 2 அராலிவடக்கு குடிநீர்வழங்கல் விஸ்தரிப்பு திட்டம் 3 அனலைதீவு குடிநீர் வழங்கல் திட்டம் 4. நயினாதீவு வழங்கல் திட்டம்.

இத்திட்டங்களுக்கான நடைமுறைத் திட்டவேலைகளை நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தற்போது மேற்கொண்டு வருகிறது.

தற்பொழுதுள்ள எவுனிசர குடிநீர் விநியோகத்திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை இச்சபை மேற்கொண்டு வருகிறது.

சந்திப்பு: தி. வெற்றிவேலுப்பிள்ளை

என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? வருங்காலத்தில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்பது பற்றி அவரிடம் கேட்டபொழுதே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

தேங்கிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, உவர் நீர் உள்ள பகுதிகளுக்கும் குடிநீர்த்திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. இத்திட்டங்கள் மூன்று விதமாக மேற்கொள்ளப்படுகிறது.

(1) பெரிய நீர்த்திட்டங்கள் அரசாங்கத்தின் பண உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டங்கள் நகரப்புறங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

(2) "யுனிசெப்" ஸ்தாபனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் சிறு குடிநீர் விநியோகத்திட்டங்கள், கிராமப்பகுதிகளிலுள்ள மக்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

(3) அவ்வலயப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட ஆண்டுதோறான பங்குமூலப்பணத்தில் வரவுசெலவுத்திட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இத்திட்டங்கள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் மேற்கொள்ளப்படும்.

தற்போது இச்சபை கிளிநொச்சியில் ஒரு பாரிய குடிநீர் வழங்கல் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சிப் பட்டினசபைஎல்லைக்குள் வசிக்கும் மக்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்தின் நிர்மாண வேலைகளைத் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் குறிக்கப்பட்ட காலத்தில் பூர்த்திசெய்யமுடியாதிருக்கின்றது. எனினும் இத்திட்டத்தை விரைவில் பூர்த்திசெய்ய ஏற்றநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகரசபை மக்களின் குடிநீர்ப்பிரச்னையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தற்போது தேங்கிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இச்சபையினால் தற்போது மாநகரசபையினால் விநியோகிக்கப்படும் குடிநீருடன் கலந்துமாக ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் கலன்குடிநீரை விநியோகிப்பதற்கான நிர்மாண வேலைகள் திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நிர்மாணவேலைகளையும் வெகு விரைவில் பூர்த்திசெய்ய இச்சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்திலுள்ள விடத்தல்தீவு, வங்காலை, நானாட்டான் ஆகிய கிராமங்களில் தற்போதுள்ள குழாய்நீர்த்திட்டத்தை, நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் விருத்திசெய்வதற்கு இச்சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

(வெ)

திறந்தவெளிப் பல்கலைக்கழகம்

[தொழுப்பு]

அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் மூதல் கட்ட நடைமுறைத் தேவைகளுக்கான உதவியை வழங்க வெளிநாட்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றது.

வருடந்தோறும் யாத்திரீகர்களினால் தரிசிக்கப்படும் புனித ஸ்தலங்களாக கதிர்காமம், சேருவில் ஆகிய இடங்கள் விளங்குவதால் இங்கே விடுமுறைகளை விருந்தினர்களாக ஆசிரியர் குடிமக்களும் நிறுவப்படவுள்ளன. இது 9 ஆசிரியர் குடிமக்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஈ]

மேற்கொண்டு வருகின்றது.

வருடந்தோறும் யாத்திரீகர்களினால் தரிசிக்கப்படும் புனித ஸ்தலங்களாக கதிர்காமம், சேருவில் ஆகிய இடங்கள் விளங்குவதால் இங்கே விடுமுறைகளை விருந்தினர்களாக ஆசிரியர் குடிமக்களும் நிறுவப்படவுள்ளன. இது 9 ஆசிரியர் குடிமக்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஈ]

முன்வந்துள்ளன

இப்பல்கலைக்கழகத்திற்கான உபகரணங்களுக்கும் விரிவுரையாளரின் சேவைகளுக்கும் இந்நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதி பயன்படுத்தப்படும். அடுத்த வருட முற்பகுதியில் இப்பல்கலைக்கழகம் பெருப்பாலும் இயங்கத் தொடங்குமென்றும் அவர் தெரிவித்தார்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப்பிரிவினால் இப்பல்கலைக்கழகத்திற்காக இருபத்தேழு கோடி ரூபாவை மூன்று வருடகாலத்திற்கு வழங்குவதற்கான திட்டத்தில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது

(வெ)

"வடக்கு, கிழக்கு மக்கள்

நாட்டு முன்னேற்றத்தையே பெரிதும் விரும்புகின்றனர்'

[நமது நிருபர்]

"வடக்கு, கிழக்கு மக்கள், நாட்டின் அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள். நாட்டைப் பிரிக்கும் நோக்கத்துடன் அவர்கள் வாக்களிக்கவில்லை"

இவ்வாறு, கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி நேற்று, பட்ஜட் விவாதத்தில் பேசுகையில் கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில், நாட்டின் சுதந்திரத்திரத்துக்காகபோராடிய நீங்கள் ஏன் நாட்டு அபிவிருத்திக்காகப் போராடமுடியாது?" என்று கேட்டார்.

"உங்கள் தலைவர் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து, திரு. திருச்செல்வத்தை அமைச்சராக நியமித்து, அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் இப்படியாக ஏன் நீங்கள் ஒத்துழைப்பு வழங்க முடியாது? ஜனாதிபதி உங்களுக்கு நேசக்கரம் நீட்டியும் அதனை பற்றிக் கொள்ள நீங்கள் முன்வராது தூர அதிர்ஷ்டமானதே" என்றும் கொழும்பு மாவட்ட அமைச்சர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்குவகையில் யாழ்ப்பாணம் எம் பி. திரு வெ யோகேஸ்வரன் தனது உரையை நிகழ்த்தினார்.

[ஈ]

கிராமியத் தொண்டர்சபை: ஐ. ஜி. பி. தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

கிராமத் தொண்டர் சபையினர் தங்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள பொலிஸ்நிலையங்களில்பதிவுசெய்துகொள்ள வேண்டும் என வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு பி மகேந்திரன் தெரிவித்தார்

தொண்டர்சபை அமைப்படுமுன்னர் அவ்வப்பகுதி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவரின் அனுசரணையுடன் தொண்டர்சபை அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொண்டர்சபை அமைக்கப்பட்டபின், தொண்டர்கள் தங்களின் இரு புகைப்படங்களையும் விபரங்களையும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கொடுத்துத் தங்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்

பொலிசாரினால் தொண்டர்களுக்கு 'பட்ச்' அல்லது அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

[ஈ]

ஈரான்மீது அமெரிக்கா தாக்கினால்

பணயக்கைதிகள் கொலைசெய்யப்படுவார்கள்:

கார்ட்டருக்கு கொமெய்னி பதிலடி!

(தெஹ்ரான்)

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிகாரிகள் கொலை செய்யப்பட்டு, தூதரகமும் தகர்க்கப்படுமென்று ஈரானிய மாணவர் தலைவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இதேவேளையில் பணயம் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க அதிகாரிகளில் மேலும் ஐந்து பேரை மாணவர்கள் விடுதலை செய்தனர். இவர்கள் ஐவரும் அமெரிக்கர்கள் அல்ல என்றும், ஏனைய பணயக்கைதிகள் சகலரும் அமெரிக்கர்கள் என்றும் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் ஈரானிய மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியும் நேற்று தொலைக்காட்சிக்கு அளித்த விசேடபேட்டியில்; "அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், அதிகாரிகள் கொல்லப்படுவார்கள் என்று ஈரான் மாணவர்களின் குழுவரை யாராலும் தடுக்கமுடியாது" என்று கூறியுள்ளார். (கு)

பண்டிட் நவரத்தினம் மீண்டும் யு.எஸ். செல்கிறார்

பண்டிதர் கே. எஸ். நவரத்தினம் மீண்டும் அமெரிக்கா செல்கிறார். 1978-ம் ஆண்டு அவர் ஒருமுறை அமெரிக்கா சென்று திரும்பியது வாசகர்கள் அறிந்ததே.

புளோரிடா மாநிலத்திலிருந்து வெளியிடப்படும் சோதிட ஆராய்ச்சி சஞ்சிகையின் ஆசிரியரான திரு ஜாக் கிள்ளன் 1980-ம் ஆண்டிற்கு பண்டிதர் நவரத்தினத்தை சோதிட விருந்தினராக அழைத்துள்ளார். இவ்வாநிலத்தில் மாத்திரம் 3000 சோதிடர்கள் வாழ்கிறார்கள். 1980-ம் ஆண்டிற்கு சோதிட ஆராய்ச்சிப் பத்திரிகையின் பண்டிதர் நவரத்தினம் இந்த சோதிடத்திற்கும் வேறுதேச சோதிடத்திற்கும் முள்ள வித்தியாசங்களின் நடைமுறை ரீதியாக இந்த சோதிடத்தில் விளைவை நிற்குமு தனித்துவத்தை எடுத்து விளக்கி நடைமுறை ஆடியபடையில் பலன் கூறும் முறையையும் கிரகங்கள், நட்சத்திரங்களின் செய்திகளை இப் பூமியிலுள்ளவர்களுக்கு எவ்வாறு தருகின்றன என்பதையும் பலன்கூறி விளக்குவார்.

இதனால் அடுத்த வருடமும் இவருக்கு அமெரிக்கா செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர் இம்முறை திரு. ஜாக் கிள்ளனின் விருந்தினராக புளோரிடா மாநிலத்திலுள்ள ஒலான்டோ பட்டினத்தில் தங்கியிருப்பார்.

"ஈரானை விட்டு

சகல தூதுவரும் வெளியேற வேண்டும்"

பிரிட்டிஷ் உறுப்பினர்கள் கோரிக்கை

லண்டன், நவ. 23

ஈரானிலிருக்கும் சகல தூதுவர்களும்உடனடியாக ஈரானை விட்டு வெளியேறுவது ஐக்கிய நாடுகள் சபை கூட்டப்பட வேண்டுமென்று லண்டனிலுள்ள சகலகட்சி உறுப்பினர்களும் கோரியிருக்கிறார்கள்.

லண்டனிலுள்ள சகலகட்சி உறுப்பினர்களும் கையொப்பமிட்டு ஐ.நா. பொதுச்செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

இதேவேளையில் ஈரானின் நடவடிக்கைகள் பற்றி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் கருத்துத் தெரிவிக்கையில், நாளைமுதல் இவர்களின் செயலாக இது இருக்க முடியாதென்று கூறியுள்ளார். (கு)

மரம்நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தினரின் மரம் நாட்டு விழா நாளை காலை (ஞாயிற்றுக்கிழமை) வாசிகர்கள் மத்

[5 பக்கம் பார்க்க]

பாகிஸ்தானிலிருக்கும்

அமெரிக்க அதிகாரிகள் தாயகம் அனுப்பப்படுவர்

இஸ்லாமாபாத், நவ. 22

பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு தற்போது பிரிட்டிஷ் தூதரகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க அதிகாரிகள் நாளை வாஷிங்டனுக்கு அனுப்பப்படுவார்கள்.

மெக்கா பள்ளிவாசல் முற்றுகைக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்பு உண்டென்று கருதி கடந்த புதன்கிழமை இஸ்லாமாபாத்திலிருந்த அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டதுடன் அப்போது இரண்டு அமெரிக்க அதிகாரிகள் கொலைசெய்யப்பட்டதும் தெரிந்ததே. (கு)

"12 தொகுதிகள் ஜனதாவுக்கு வேண்டும்"

அ. தி. மு. க. விடம் கோரிக்கை

சென்னை, நவ. 23

தமிழ் நாட்டிலுள்ள 39 தொகுதிகளில் 12 இடங்கள் ஜனதாகட்சிக்கு ஒதுக்கவேண்டுமென்று ஜனதா கட்சியின் மாநிலக்குழு அ. இ. அ. தி. மு. க. வை கேட்டிருக்கிறது.

இந்தவாரம் ஜனதாகட்சியின் பொதுச்செயலாளர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே சென்னையில் தெரிவித்தார்.

12 இடங்கள் ஒதுக்கப்படாத பட்சத்தில் ஜனதா கட்சி தனித்தே போட்டியிடுமென்றும் அவர் கூறியுள்ளார்.

இத்தொலையிலிருந்து பிறிதும் குறைக்க முடியாதென்று கூறிய திரு. ஹெக்டே, தொகுதி ஒதுக்கீடுகள் பற்றிய அ. இ. அ. தி. மு. க. வின் முடிவை அறிய ஜனதாகட்சியினர் ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்தார். (கு)

வல்மெலிக்ஸ்

GARADS

ரூபா 6/30

வல்மெலிக்ஸ்
பாரம்பரிய மூலிகை மருந்து
ஆடாதோடை எமது முன்னோர்களால்
தொண்டை அரிப்பையும், இருமலையும்
குணமாக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஆடாதோடை வேரினை, சுத்தமாக்கி செறிவாக்கி
அடிப்படையாகக்கொண்ட
ஒரு நவீன இருமல் பாணி வல்மெலிக்ஸ்.
வல்மெலிக்ஸ் இருமல் லொசெஞ்ஜெஸ்சும்
கிடைக்கும். சுகாதாரமாக ஈயக்கடதாசியில்
வசதியாக வருகிறது.
வல்மெலிக்ஸ் லொசெஞ்ஜெஸ் தொண்டைக் கர
கரப்பையும், தொல்லை தரும் இருமலையும்
குணமாக்க, உரியது.

விற்பனையாளர்கள்
ஜே. எல். மொறிசன் சன் அன்ட்
ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டெட்.,
த. பெ. இல 430, கொழும்பு

ஒரு லொசெஞ்ஜெர் 15 சதம்

அது பழையதும் புதியதும்

'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :.....

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? .....

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?.....

(4) புதிய பிரதமர் யார்?.....
பெயர்:.....
விலாசம்: .....
.....
.....

....
கையொப்பம் திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

FINAL WEEK
RANEE CINEMA- Jaffna
Daily 5 Shows at 10-30 a.m 2-15, 4-45, 7-15 & 9-45 p.m
THE EXORCIST
COLOR — DO NOT MISS!
"த எக்ஸோர்சிஸ்ற்"
பிசாசினால் பீடிகக்பட்ட ஒரு சிறுமியின் அவல நிலையை சித்தரிக்கும் அதிபயங்கரச் சித்திரம்
(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)
(குறிப்பிட்ட சில தினங்களை மட்டும் — தவறவிடாதீர்கள்)

8-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி காட்சி 10-30, பி.ப 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

8-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, குமாரி நடித்த
முக்தா பிலிம்சாரின்
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப.2-30 6-30, 9-30
எம் ஜி. ஆர். - ரோஜாதேவி நடித்த
என் கடமை
(புதிய பிரதி)

2ND POPULAR WEEK
REGAL (Jaffna Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m.
THIS IS LIKE NOROBBERY YOU'VE EVER IMAGINED
CHARLES GRODIN CANDICE BERGEN
IN
11 HARROW HOUSE
(Color)
(More Suitable For Adults)
NEXT ATTRACTION
FRENCH CONNECTION NO: 2

ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வாணிஸ்ரீ--நாகேஷ் நடித்த
நிறைகுடம் (புதிய பிரதி)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி 6 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா
நடைவிவரம்
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி) கலர்

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 6 காட்சிகள்
அபிமான்
(ஹிந்தி)

சாந்தி யாழ்நகர்.
போன்: 7642.
வெற்றி நடைபோடும் 6வது ஜனத்திரள் வாரம்!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. காட்சிகள்
● ஜெய்சங்கர்
● ஸ்ரீதேவி
● ஸ்ரீ சாந்தி
● எம். ஆர். ராதா
● அசோகன்
● மனோரமா
டாக்ஸி டிரைவர்
-வண்ணத் திரையோவியம்-

"சிங்கப்பூரைப்போல் அபிவிருத்தி

ஏற்பட வழிஎன்ன?

சபையில் சம்பந்தர் விளக்கம்

(தொழுப்பு)

"சிங்கப்பூரைப்போல இலங்கையை அபிவிருத்தி செய்யப் போவதாக அடிக்கடி கூறுகிறீர்கள். ஆனால் சிங்கப்பூரைப் போல இங்கு இனஐக்கியம் இருக்கிறதா? அங்கு சகல இனங்களும் ஒரேவிதமாக நடத்தப்படுகிறார்கள். அதனால் தான் அந்நாடு அபிவிருத்தி அடைந்துள்ளது."

இவ்வாறு திருமலை மரம்

மரம்நாட்டு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திய மரா விநாயகத்தில் நடைபெறும்

ஆசிரியர் கந்தலூரி அதிபர் திரு இ. கனகசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமாநிலக்கல்விப்பணிப்பாளர் திரு. நி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பாடு பற்றும் பாடசாலைகளுக்கு வெற்றிவேலர் திரு. க. கனகராசா மரக்கன்று இலவசமாக வழங்குவார் (கொ)

வெஸ்லி (கொழும்பு)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-சாரதாதிரி
ஜக்கம்மா

நாகம்ஸ் (கல்கூல்)
தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு 1-30
எம் ஜி. ஆர்-சாரதாதிரி
குலேபகாவலி
(புதிய பிரதி)

2nd WEEK
RIO Jaffna Phone: 7607
Daily 4 shows
SWEENEY 2
(Adults Only)

சீனாவுக்குச் சென்றனர்

(யாழ்ப்பாண

இடது கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதிநிதிகளாகக் குழுவாகச் சேர்ந்த ஏ. ஏ. கபிரமணியம், சே. நவரத்தினம் ஆகிய இருவரும் கடந்த 17-ம் திகதி சீனாவிற்கு பயணமாகினர்.

சீனாவில் நடைபெறுகின்ற இடது கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதிநிதிகளாகச் சென்றுள்ள இருவரும் சுமார் ஒருமாத காலம் சீனாவில் தங்கி இருப்பார்கள். இவர்கள் அங்கு தங்கி இருக்கும் காலத்தில் முக்கியமான பிரதேசங்களைப் பார்வையிடுவதுடன் பல்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்பதும் தெரியவருகிறது.

நிதிமன்றச்சாட்டுவரவினையக் குறைப்போம் எப்படிக் குறைப்பது என்பதைக் கூறுங்கள் பார்ப்போம்

சம்பந்தன்: விலைவாசியைக் குறைப்போம் என்று நாங்கள் தேர்தல் காலத்தில் கூறினோம் (6ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்
காலஞ்சென்ற சிவகப் பிரமணியம் வெஞ்ஞானம் என்பவரது மரண சாதனமில்லா மரணச் சொத்தில் விடயத்தில்,
மரணமெய்தியவர்
மரண சாதன)
நியாய ஏக்கம்)
இல: ரி/3484

கஸ் வெஞ்ஞானம் வயது பெண் அன்னபூரணம் 28 பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலேபெயர்கொண்ட குறிப்பிட்ட இறந்தபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டு அதில் அறத்தினங்க பின்னுறுதிக் கட்டளை பதிவுப்பட்டுள்ளதென மனுத்தாரால் அறிவிக்கப்படுகின்றது

அதிகாரமுள்ள ஆண்டு 1979ம் ஆண்டு மார்கழி மாதம் 14ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவுப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமாகவோ பகுதியாகவோ தெளிவுபடுத்தக் மரணம் காரணமாக இந்தாரால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1979ம் ஆண்டு ஆவணி மாதம் 27ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பெ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரரின் சட்டத்தரணி
4152

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

4 CYCLE BRIGGS & STRATTON

ஹேவீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

Mel Ads

உளவு பார்த்த குற்றத்திற்கு மரண தண்டனை

பணயக் கைதிகளுக்கு ஈரான் மாணவர் அறிவிப்பு

தெஹ்ரான், நவ 23

அமெரிக்க பணயக் கைதிகள் மீது விசாரணை நடத்தப்பட இருக்கும் உளவு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என ஈரானிய மாணவர்கள் இன்று அறிவித்தனர்.

அமெரிக்காவில் இராணுவ நடவடிக்கை எச்சரிக்கையை மாணவர்கள் இவ்வாறு அறிவித்தனர்

பணயக் கைதிகள் 49 பேரும் விரைவில் இஸ்லாமிய நீதிமன்றம் முன்னிலையில் நிறுத்தப்பட்டு ஈரானில் உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்படுவர் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர் (இ)

பணயக் கைதிகளை விடுவித்த பின்னரே ஷா பற்றி பேச்சு

அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன், நவ 23

ஈரானிய ஷாவை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதுபற்றி பேச்சு நடத்த முன்னர் பணயக்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

இவ்வாறு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுக்குமாயின் பணயக்கைதிகள் படுகொலை செய்யப்படுவர் என மாணவர்களுக்கு ஆயத்தொல்லை கோமெய்னியும் நேற்று அறிவித்ததை அடுத்தே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அமெரிக்கர்களைப் பணயம் வைத்துள்ள மாணவர்களின் நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்து கொமெய்னியை பொறுப்பேற்க வேண்டுமென்றும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

யாழ். மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை கூட்டம் இன்மாதம் 30க் தேதி யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தில் அமரர் சோ. வைத்திலிங்கம் துரைசாமிக்கு ஓர் இரங்கல் நிறைவுறாத சம்பந்தமான நிதிக்குழுவின் தீர்மானம் பற்றி முடிவு செய்யப்படவிருக்கிறது (ம)

ஷா 2 வாரங்களில் மெக்சிக்கோ செல்வார்

நியூயோர்க், நவ 23

நியூயோர்க்கில் உள்ள ஆங்கில பத்திரிகையொன்றில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றவரும் ஈரானிய ஷா இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் மெக்சிக்கோ திரும்புவார் என்று நியூயோர்க் தொலைக்காட்சி நிருபர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இன்னும் இரு வாரகாலத்திற்கு தங்கிய ஆங்கில பத்திரிகையிலிருந்து வெளியேறி மெக்சிக்கோ செல்ல முடியும் என்று ஷாவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு நடுப்பகுதியில் ஈரானில் அரசியல் நெருக்கடி ஆரம்பித்ததும் மன்னர் ஷா விடுத்தவர்

கணவனைத் தேடிவந்த மனைவியிடம் கொள்ளை

நால்வர் கைது!

(யாழ்ப்பாணம்)

கணவனைத்தேடி யாழ்.நகரத்திற்கு வந்த இளம் பெண்ணிடம் நகைகளை கொள்ளையடித்த நான்கு இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணக் நீதவான் திரு. இராஜலிங்கம் முன்னிலையில் சந்தேகநபர்களை ஆஜர் செய்தபோது அவர்களை ரிமாண்டில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இரண்டு வகுப்புகளுக்கு முன் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற உடுவிலைச் சேர்ந்த 20 வயதான திருமதி இரத்தினம் பரமலோசினியை, தனது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்த பெண்ணுவர்.

கணவனை தேடி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு இரவு 7 மணிக்கு இப்பெண் வந்தபோது, கணவனின் இருப்பிடத்தை காட்டுவதாக கூறிய 4 இளைஞர்கள் அவரை நாவலர் வீதியிலுள்ள அரிசி ஆலைக்கு கூட்டிச் சென்று மறைப்பகுதி கொடுத்தபின் 475 ரூபா பெறுமதியான ஜாக்கெட்டையும் 260 ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்ததாக, புகார் செய்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் வி. தம்பா ஈரானிலிருந்து வெளியேறி மெக்சிக்கோவிலேயே தங்கியிருந்தார்.

இதைத்தொடர்ந்து சுகயீனம் காரணமாக கடந்த சில நாட்களுக்கு முன்னரே ஷா நியூயோர்க் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (இ)

பின் ஆசனத்தில் மாஜி அமைச்சர்

(சொழுகிறது)

கல்லையில் ராஜினாமாச் செய்து கொண்ட பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன தோற்று பாராளுமன்றத்தில் நுழைந்து தரவரிசையே பின் ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

கம்புறுப்பிட்டிய தொகுதியில் புதிய எம்.பி. யாக நியமிக்கப்பட்டுள்ள திரு. அல்பேட் சிறிவாவும் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். | (ரு)

மாஜிஸ்ரே—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு தீர்மானிக்கிறது.

எஞ்சிய சட்டம் திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேறியதும் இது அமுல்செய்யப்பட உள்ளது

புதிய திருத்தத்திற்படி 200 ரூபாவுக்கு குறைந்த லஞ்ச வழக்குகளை மாஜிஸ்ரேட் நீதிமன்றங்களும் 200 ரூபாவுக்கு கூடுதலான லஞ்ச வழக்குகளை உயர் நீதிமன்றமும் விசாரணை செய்யும்.

சிங்கப்பூரை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் போய்கூற விரும்பி நீங்கள் தான் தேர்தல் அறிக்கையிலேயே இப்படி கூறினீர்கள்.

நிதியமைச்சர்: தமிழ் ஈழத்தில் எப்படி விலைவாசியை குறைப்பீர்கள் என்று கூறுவீர்கள்.

சம்பந்தன்: தமிழ் ஈழத்தில் நான் நிதியமைச்சராக இருக்க மாட்டேன் என்னுடன் உறுப்பினர் தான் நிதியமைச்சராக இருப்பார்; (ம)

இன்று நடைபெறும் நாவலர்விழாக்கள்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு சைவமாமன்றத்தால் நடாத்தப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நூற்றாண்டுவிழாவும், மன்ற ஆண்டுவிழாவும் இன்று சனிக்கிழமை மாலை சந்திரமௌலீசுவரர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

திரு ச சோமாலபிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு கனகரட்ணம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆசியுரை வழங்குவார்

பொதுரணில விருதுகள் வழங்கப்படுவர். பண்டிதை சிவனருட் செல்வி திருமதி வைரமுத்து பாலரதன், பண்டிதர் வே சண்முகப்பிள்ளை, சைவமாமன்றத் தலைவர் திரு கி சிற்றம்பலம் ஆகியோர் உரையாற்றுவர் வழங்குவர் மன்றம். நாடகங்கள் ஆகியவையும் நடைபெறவிருக்கின்றன.

காரைநகரில்

காரைநகர் சைவமாசபை நாவலர் நூற்றாண்டுவிழாவை இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காரைநகர் சைவமாசபை மண்டபத்தில் கொண்டாடவிருக்கிறது

திரு ச சபாபதி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் கலாநிதி வே இராமகிருஷ்ணன், வித்துவான் க. முருகேசன், பண்டிதர் முத்தையா, திரு ச சிற்றம்பலம் ஆகியோர் உரையாற்றுவர்.

திருமு ஆ சந்தையா தலைமையில் நடைபெறவிருக்கும் நாளைய விழாவில் திரு பொ வன்னியசிங்கம், வித்துவான் இ ஆறுமுகம், சங்கீர் காரை செ சுந்தரலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்

சந்தபுராண படனம், பண்ணிசை, விக்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

தப்பியோடிய மனநோயாளர்

(சொழுகிறது)

கல்கொடை மனநோய்ஆஸ்பத்திரியிலிருந்து கடந்த 10 மாத காலத்தில் 1105 மனநோயாளர் தப்பிச்சென்றுள்ளனர்.

நாடு முழுவதும் இவர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர். கல்கொடை ஆஸ்பத்திரி கத்திலட்சார் 1105 மனநோயாளர்களைக் காணவில்லையென கல்கொடை பொலிசாருக்கு புகார்செய்துள்ளார்

திறந்த வெளிவார்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் மனநோயாளிகளே தப்பிச் சென்றுள்ளனர்; (ம)

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்கஉத்தியோகத்தருடன்,

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும்,

"புறுடான்" தயாரிப்பாளர்களான எப். எம். சி.

(F. M. C. [International] S. A.) கம்பனியாரும்

இணைந்து நடத்தும்

விவசாய கருத்தரங்கு

சிறப்புற

ஒட்டோஸ் லிமிட்டெட் நல்லாசிகள்!

காலம்: 26-11-79 திங்கட்கிழமை

காலை 9-30 மணி

இடம்: திருநெல்வேலி விவசாய கலாசாலை

ஒட்டோஸ் லிமிட்டெட்,

யாழ்ப்பாணம்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

4189

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No: GP/8948/78 The Eelanadu P B No: 49 Telegram Eelanadu Phone: 8891